நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 60/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூங்கொடி |
| தந்தை / கணவர் பெயர் | : | முருகன் |
| கிராமம் | : | அச்சாங்காடு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 30–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–04.20 PM )

1. நான் தற்போது கொளத்தூர் அச்சான்காட்டில் குடியிருந்து வருகிறேன்.

எனது கணவர் மின்சார வாரியத்தில் வேலை செய்து வருகிறார். நான் மீன்கடை வைத்து நடத்தி வருகிறேன். நாங்கள் மயில்சாமி என்பவரிடம் 5 ½ சென்ட் இடம் வாங்கினோம். நாங்கள் எதிரிகளின் வீட்டு வழியாக உள்ள பொதுதடத்தில் தான் எங்கள் வீட்டிற்கு செல்ல வேண்டும்.

2. நாங்கள் வாங்கிய 5 ½ சென்ட் நிலத்தில் சிவன் லிங்கத்தை வைத்து வழிபாடு செய்து வந்தோம். 1 ½ வருடங்களுக்கு முன்பு கொளத்தூர் காவல் நிலையத்தில் எதிரிகள் எங்களை அடித்துவிட்டதாக புகார் கொடுக்க சென்றிருந்தோம். திரும்பி வீட்டிற்கு வந்தபோது எங்கள் வீட்டில் வயதானவர்கள் 10 பேர் வைத்து பார்த்து வருகிறோம். அவர்களில் ஒருவர் சிலை வைத்து வழிபடும் இடத்தில் ஏதோ சத்தம் வருகிறது என்று சொன்னார். நாங்கள் எங்கள் வீட்டிற்கு வெளியே பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா மூலம் பார்த்தோம்.

3. எதிரி குமார் சாமி சிலையின் தலை மீது காலால் எட்டி உதைத்தும், அந்த சிவலிங்க சிலையை எடுத்து நந்தியின் தலைமீது போட்டு உடைத்துக்கொண்டிருந்தார். கல்லால் நந்தி சிலையின் மீது போட்டு அதையும் உடைத்துவிட்டார். அருகில் எதிரி லதாவும் நின்றுக்கொண்டு கெட்டவார்த்தையால் திட்டிக்கொண்டும், கத்திக்கொண்டும் இருந்தார்.

4. சம்பவம் நடந்து சிறிதுநேரம் கழித்து எதிரி குமார் மீண்டும் திரும்பி வந்து உடைத்த சிலைகளை சிமெண்ட் சாக்கிலும், நந்தி சிலையை கையில் பிடித்துக்கொண்டும் ஓடினார். இதுசம்மந்தமாக கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். **புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நடந்த சம்பவங்களை பதிவுசெய்த கண்காணிப்பு கேமராவிலிருந்து பென்டிரைவ் மூலமாக பதிவிறக்கம் செய்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். **அந்த பென்டிரைவை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(04.35 PM)

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.